புதிய அவையம்

PUTHIYA AVAIYAM
(PEER – REVIEWED JOURNAL)
ISSN :2456-821X
Vol. 08, Issue 02, January 2025

=====================================================

# “நற்றாய் கூற்றுப் பாடல்களில் ஆக்க இலக்கியங்களை அடையாளப் படுத்தும் நனவிலிமனப் படைப்புகள் ”

=====================================================

*முனைவர் சு. சிவசந்திரகுமார்*
*உதவிப் பேராசிரியர்*
*தமிழ் முதுகலை & ஆய்வுத்துறை*
*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)*
*திருப்பத்தூர் - 635 601*

=====================================================================

*ஆய்வுச் சுருக்கம்*

***ஆக்க இலக்கியங்கள் சுதந்திர தன்மைக்கு முதன்மை தந்தமைவன. நற்றாய் கூற்றுப் பாடல்கள் நற்றாய், செவிலியின் வெளியினை நிர்ணயிக்கின்றது. இதன் மூலம் பெண்களுக்கு இருந்த கட்டுப்பாடுகள் புலனாகின்றன. இவ்வெளியினை விட்டு விலகிப் பாடல்களைப் புனையும் புலவர்கள் இம்மரபிற்கு எதிர்நிலையிலிருந்து செயல்படுகின்றனர். அதனை ஆக்க இலக்கிய மரபு என்பதாகக் கொள்ளலாம். இவ் ஆக்க இலக்கிய மரபுச் சட்டகத்திற்கு இணையாக பிராய்டின் உளப்பகுப்பாய்வு மனநிலை கருத்தாக்கம் அமைந்துள்ளது. படைப்பாக்க நனவிலியில் நற்றாய் கூற்றுப் பாடல்களில் நனவிலிப் பெற்றோர் செல்லும் பாதையாக அமைந்திருக்க வேண்டும். இதற்கு மாறாக அமைந்துள்ள கபிலரின் அகநானூற்று 203 பாடல் எடுத்துக் கொள்ளப்பட்டது. இப்பாடலினை நனவிலி மனச் சிக்கலுகளுக்கு ஆட்படாமல் படைத்துக் காட்டுவதற்குக் கபிலரின் பல்துறை அறிவுமரபு கைகொடுத்திருக்கின்றது எல்லாத் துறைகளிலும் மனம் விரிவடையாமல் ஏதாவது ஒரு துறையில் மட்டும் அது வளர்வதாலேயே மறை மனக் கோளாறுகள் ஏற்படுவதாக யூங்***

*கருதுகின்றார். பல சமயங்களில் தன் இயல்பிற்கு ஒவ்வாத பணிகளைச் செய்ய வேண்டி நேரிடுகின்றது. அப்பொழுது தான் மறைமனக் கோளாறுகள் உண்டாகின்றன. பல துறையில் பயணித்தமைக் காரணமாகக் கபிலரின் மறைமனக் கோளாறு களையப்பட்டுள்ளதென்பதைச் சான்றுகளின் அடிப்படையில் நிறுவுவதே இக்கட்டுரையின் முதன்மைப் பணியாகும்.*

***குறிச் சொற்கள் (key words):*** *நற்றாய் கூற்று , நனவிலி மனம், ஆக்க இலக்கியம்.*

***முன்னுரை***

*தொல்காப்பியர் கட்டமைக்கும் 'தாயர்' தலைவியின் உடன்போக்கின் போது கூற்று நிகழ்த்துவதாகப் பாடல்கள் சங்க இலக்கியங்களில் பதிவாகியுள்ளன. தொல்காப்பியர் உடன்போக்கின் போது தலைவியைத் தேடிச் செல்பவர் 'தாயர்' என்கிறார். நற்றாய் மனையிலிருந்து புலம்புவதாகவும் செவிலி சுரத்திடைச் செல்வதாகவும் உரைக்காரர்களால் உரைச் செய்யப்படுகின்றது. இப்பகுப்பினுள் தாயர் தலைவியின் எதிர்கால இல்லத்திற்குச் செல்வது போன்ற பாடல்கள் இல்லை. இச்சூழலுக்கு மாறாக கபிலர் படைத்துக் காட்டும் தாய்க்கூற்று பாடல் அகநானூறு 203 அமைந்துள்ளது. பொதுவெளிச் சமூகத்துடன் உடன்பட மறுத்து பெண் மனநிலையினை உள்வாங்கியெழுதப்பட்ட சங்கப்பாடலாக இப்பாடலைக் கொள்ளலாம். தாய் கூற்றுப் பாடல்களில் இருந்து இப்பாடல் பிரிதொரு கோணத்தில் பயணிப்பதற்கு நனவிலி மனச் சுருக்கமே காரணமாக அமைந்துள்ளது என்பதை எடுத்துச் சொல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

*அகநானூறு 203:*

***இன்னள் இணையள் நின் மகள் எனப், பல்நாள்***

***எனக்குவந்து உரைப்பவும்,***

*தனக்கு உரைப்பு அறியேன் - கபிலர், மகட் போக்கிய தாய் சொல்லியது , பழிச்சொல் கூறுவதைத் தொழிலாக உடைய புறங்கூறும் மகளிர் பல சொன்னாலும் , என்னிடமும் வந்து என்மகள் பற்றி பலர் கூறினர். நான் அதைக் கேட்டுக் கொண்டேனே தவிர, என்மகளிடம் அவள் நாணுவாள் என்பது பற்றி ஒரு சொல் கூடக் கேட்கவில்லை. படைப்பாக்க மனநிலை என்பது இடிபஸ் மனநிலை என்கின்றது ஃபிராய்டியம் இடிபஸ் மகனாகிய கபிலருக்கு வெறுக்கப்படவேண்டிய தந்தையோடு தாய் மேற்கொள்ளவிருக்கும் வாழ்க்கைப் பயணம் இயல்பாக அமைந்துள்ளது. இப்பாடலின் தொடக்க வரிகளைக் "கொன்றை அறக்கட்டளை - குமுதம்" இணைந்து நடத்திய சங்க இலக்கியச் சிறுகதைப்*

போட்டிச் சிறுகதை "அம்மா" என்னும் தலைப்பில் 21 ஆம் நூற்றாண்டிற்கு ஏற்றாற் போல் சிறுகதையாக்கியுள்ளது. அம்மா சிறுகதையின் இறுதியடிகள் "ஆசீர்வதிப்பது போல இருவரின் தலையிலும் கை வைத்துவிட்டு எதுவும் பேசாமல் வெளியில் சென்றாள்." – வித்யா சுப்ரமணியம் குமுதம் 16.12.2020. ப.37 என்பதாக அமைந்துள்ளது. சங்க இலக்கியத்தில் தாய் கூற்றுப்பாடல்களைப் பெரும்பாலும் ஆண்பால் புலவர்களே பாடியுள்ளனர். இந்நிலையிலிருந்து மாறுபட்டு பெண் படைப்பாளியினால் படைக்கப்பட்டுள்ள அம்மா சிறுகதையானது ஆசீர்வதிப்பது போல இருக்கின்றதேயொழிய ஆசீர்வதிக்கவில்லை என்பது வேடிக்கையாகின்றது. இதே பாடலின் இறுதியடிகள் பின்வருமாறு அமைந்துள்ளது,

"செல்விருந்து ஆற்றித் துச்சில் இருத்த
நுனை குழைத்து அலமரும் நொச்சி
மனை கெழு பெண்டு யான் ஆகுக மன்னே " - கபிலர்

நான் பலவழிகளை உடைய காட்டில் அவளுக்கு முன்னே சென்று மக்கள் அதிகம் வாழாத சிற்றூரில் பொலிவற்ற மலைச் சூழலில் ஒரு குடிசை அமைத்து அதன் நிழல் செய்ய அம்மனைக்குரியவளாக என் மகளும் அவனும் அங்கு வரும் போது அவர்களை இரவுவேளையில் தனியே தங்க வைக்கும் வாய்ப்பு ஏற்படாதா? படைப்பு மன நனவிலி கண்டுபிடித்த 'புறச்சாட்டல் பாதுகாப்பு உத்தி (Psychic Defence Mechanism of Projection) முறைகளில் ஒன்றுதான் மகட்போகிய தாய்க் கூற்று பாடல்கள். நொச்சி எனும் கருப்பொருள் தெரிவின் காரணமாக இப்பாடலினுள் புறச்சாட்டல் பாதுகாப்பு உத்தி செயல்படவில்லை என்பதனை உறுதி செய்யலாம். கொன்றை அறக்கட்டளை - குமுதம் இணைந்து நடத்திய சங்க இலக்கியச் சிறுகதைப் போட்டியில் இடம்பெறும் "அவள் பெயர் வள்ளி" என்னும் சிறுகதை "பெத்தவங்க கனவைச் சாம்பலாக்கிட்டு அதுல அடித்தளம் போட்டு நீங்க வாழ்க்கைய ஆரம்பிச்சா அது நல்லா இருக்காது" – (பொன். தமிழ்ச் செல்வி, குமுதம் 24.03.2021. ப. 106) என்கின்றது. வாழ்வு நல்லா இருக்காது எனும் முடிவிற்கே இத்தாய் வந்துசேர்ந்திருப்பது தந்தைச் சமூக சொல்வயலின் ஊடுபயிர் தான் என்பதை நிருப்பிக்கும் இடமாகப் படைப்பாளி கொண்டுள்ள களனாக இதனைக் கொள்ளலாம்.

நற்றாய் கூற்றுப் பாடல்களும் நனவிலியும

*பெண்ணுடலுக்கான மொழியும் வெளியும் கட்டமைக்கும் நூலாகத் தொல்காப்பியம் கொள்ளப்பட்டாலும் சமூக உடலான நற்றாயின் இயங்குவெளியினை நிர்ணயிக்கும் தரவுகள் எந்த இலக்கியத்திற்குரியன என்ற கலந்துரையாடல் கலங்காலமாகத் தமிழ்ச் சூழலில் நிகழ்ந்து வருகின்றது. (அறநிலைப்பட்டாள் ஐங்குறுநூறு:371, ஓதலாந்தையார் அறநெறி இதுவென தெளிந்த) நற்றாய் சமூக–உடல் பிரதிநிதி என்பதை உரைக்காரர்கள் தரும் இயங்குவெளியினால் உணர முடிகின்றது. ஆயின் செவியிலின் இயங்குவெளி அல்-சமூகஉடல் என்றெண்ணுவதற்கு அருமறைக் கிளத்தலின் தாய் செவிலியென்னும் போது தொல்காப்பியருக்கு ஆதிச் சமூகப் பெண்ணுடல் இயங்குவெளிப் பிரதிநிதியாகச் செவிலியைக் கொண்டுள்ளார் என்பதாகக் கொள்ளலாம். உளவியல் அடிப்படையில் இதனை மூலப்படிவமாகக் கொள்ளலாம்.*

*நற்றாய் கூற்றுப் பாடல்களும் கூட்டு நனவிலியும்*

*கூட்டு நனவிலியில் உள்ள மூலப்படிவங்கள் தான் உளவாழ்வையும் சமூகவாழ்வையும் தீர்மானிக்கின்றன. மூலப்படிவம் என்பது கூட்டுநனவிலிக்குள் இருக்கின்ற கருத்தியல் சார் உளப் பிம்பங்கள் (Mental images) என்றழைக்கப்படுகின்றன. அகநானூற்று 203 வது பாடலில் 'யாய்' என்ற சொல்லை மூலப்படிவம் என்பதாகக் கொள்ளலாம். தற்கால இலக்கியங்களில் பூக்குழி (நாவல் 2013) அந்தக் கூளியை வணங்க முடியவில்லை. பயமாக இருந்தது. (ப.11) எனும் வரிகளின் மூலமாக கூளியினை மூலப்படிவமாகப் படைத்துக் காட்டியுள்ளது. விழிகளை அகட்டி நாக்கு துருத்திப் பிரகாசமான முகத்தோடு வெறி கொண்ட கூளி . பார்த்ததும் ஏனோ அந்த உருவம் அவளுக்குப் பிடித்திருந்தது. என்பதாக ஆரம்பத்தில் குறிப்பிடும் போது சரோஜாவிற்கு இணக்கமான அல்லது நெருக்கமான ஒரு உறவாக கூளித் தோற்றமளிக்கின்றாள். எல்லாவற்றையும் அழித்துவிடும் வல்லமை அந்தப் பெண் உருவத்திற்கு இருப்பதாகத் தோன்றியது கூளி உதவப் போவதில்லை. (ப.149) அவள் இவர்கள் சாமி. என்னும் போது ஏற்கனவே இதுபோன்று பாதிக்கப்பட்ட பெண்ணாக கூளியிருந்தால் என்ற எண்ணம் படிகின்ற வாசகனுக்குத் தோன்றுவதாக அமைந்துள்ளது. கூளியின் வெறி தன்மீது தான் என்று அவளுக்கு இப்போது தோன்றியது இறுதியில் கருப் பொருள் நொச்சிக்குப் பதிலியாகச் சீமைக் கருவேல முட்கள். மூலபடிவப் பயன்பாடு , புறச்சாட்டல் பாதுகாப்பு உத்தி (Psychic Defence Mechanism of Projection) செயல்பட்டுள்ளது*

*பெத்தவன் (சிறுகதை-2013)*

***இச்சிறுகதையில் தன்வதைப்பு மிகவும் அடிப்படையிலான மன அமைப்பாக அமைந்துள்ளது. (Masochism as the Foundation of the Human Psyche) ஃபிராய்டின் பிற்கால கண்டுபிடிப்பான சாவிச்சை உணர்ச்சியின் ஒரு கூறான தன்வதைப்பு மன உணர்ச்சியே பண்பாட்டைத் தொடங்கிய இனக்குழுச் சமுதாயத்தின் தோற்றத்திற்கு மூலவேர் என்பதை புரிந்து கொள்ளமுடிகின்றது. அகப்பாடல்களில் தன்வதைப்பு மனம் மரணமாக வெளிப்படவில்லை . மாறாக அந்நிகழ்வுகள் யாவும் புற இலக்கியங்களுக்கு உரியவனாக அமைந்திருக்க பெத்தவன் அக இலக்கியத்தினுள் பயன்படுத்தியமை உற்று நோக்குதற்குரியது.***

*தொகுப்புரை:*

- ***படைப்பாக்க நனவிலியில் நற்றாய் கூற்றுப் பாடல்களில் நனவிலிப் பெற்றோர் செல்லும் பாதையாக அமைந்திருக்க வேண்டும்.***
- ***நனவிலி மனச்சிக்கலுக்களுக்கு ஆட்படாமல் படைத்துக் காட்டுவதற்குக் கபிலரின் பல்துறை அறிவுமரபு கைகொடுத்திருக்கின்றதென்பதற்குக் கபிலரின் 203 அகநானூற்றுப் பாடல் சான்றாக அமைந்துள்ளது.***
- *கி.மு. 3 நூற்றாண்டாகக் கருதப்படும் சங்க இலக்கியப் பாடலுக்குக் கி.பி. 21 ஆம் நூற்றாண்டு சிறுகதையாசிரியர்களாகப் பெண்கள் படைத்துக் காட்டும் கதைமாந்தர்கள் சமூக ஒழுக்கங்களைப் பேணிக்காக்கும் மனநிலைக் கொண்டமைந்துள்ளனர்.*
- ***ஆக்க இலக்கிய மரபாக அடையாளப்படுத்தப்படும் சிறுகதை(பெத்தவன்), நாவல் (பூக்குழி) போன்றவை முறையே தன்வதைப்பு மன உணர்ச்சி, புறச்சாட்டல் பாதுகாப்பு உத்தி ஆகியவற்றுடன் பயணிப்பதை அவதானிக்க இயலுகின்றது.***

*நிறைவுரை:*

***இலக்கிய நகர்வுகள் ஆதிபுராதாணப் பொதுவுடமைச் சமூகப் பண்பாட்டுக் கூறுகளை முன்னெடுக்க மறந்தாலும் பின்னோக்கி நகருவது ஆக்க இலக்கிய பற்றாக்குறையினைப் பறைச் சாற்றி அமைக்கின்றது. சங்க இலக்கிய பயில்வுமுறை இன்னும் கூடப் பாடத்திட்ட நகர்வில் மட்டுமே இருந்து வருவதை இருப்பத்திரோராம் நூற்றாண்டின் பெருங்குறை என்பதைத் தவிர்த்து வேறு பெயரிட உள்ளம் மட்டுமல்ல உதடுகள் கூட ஒத்துழைக்கவில்லை. சங்கச் சமூகத்துடன் கலந்த சமூகயானைக்கு காதல் நெல்லைக் கவளமாக்கிக் கொடுக்காத வரை சிதறும் நெல்மணிகளின் எண்ணிக்கை அகலிரும் விசும்பின் மீனினும் பலவேயாகும்.***

***ஆய்விற்கு உதவியன ;***

*1. இரவிச்சந்திரன்., தி.கு. தொல்காப்பியமும் ஃப்ராய்டியமும்., அலைகள் வெளியீட்டகம்.,2011.*

*2. நலங்கிள்ளி. அரங்க., சங்க இலக்கியம் : ஒரு ஃபிராய்டிய வாசிப்பு., வாணிதாசன் பதிப்பகம் ., புதுச்சேரி .,2019 .*